## 1. தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு

தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 நவம்பர் 02 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 94,470.01 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 89,453.68 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 5,016.33 மில்லியன் அதாவது 5.31 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 64.61 | 62.75 | 1.86 | 2.88 |
| மூலதனம் | 94,405.40 | 89,390.93 | 5,014.47 | 5.31 |
| மொத்தம் | **94,470.01** | **89,453.68** | **5,016.33** | **5.31** |

## 2.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக இரண்டு வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 43,540.00 மில்லியன் திருத்திய வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 29,797.77 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 68.44 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | திருத்திய மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.02.03.00 | 38,500.00 | 26,118.63 | 12,381.37 | 32.16 |
| 20.02.04.00 | 5,040.00 | 3,679.14 | 1,360.86 | 27.00 |
| மொத்தம் | **43,540.00** | **29,797.77** | **13,742.23** | **31.56** |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 24101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.33 | 2.07 | 2.13 | 3.02 | 19.00 | 12.48 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

செலவின விடயமொன்றிற்காக மிகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் ஐந்து சதவீதமாக இருந்தது.

## 3.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 02 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீடுகளுக்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) 20.02.03.00 ஆம் வருமானக் குறியீடு - இலாபம்

கம்பனிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் பங்கிலாபத்தை செலுத்துவதற்கு முன்னர் மேற்கொள்கின்ற கழிப்பனவுகள் தொடர்பாக பரிசோதனை அறிக்கையை கொண்டு வருவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) 20.02.04.00 ஆம் வருமானக் குறியீடு – பங்கிலாபம்

பெருந்தோட்ட தனியார் கம்பனியொன்றில் 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் முறையே ரூபா 151 மில்லியன் மற்றும் ரூபா 603 மில்லியனான நட்டங்கள் காணப்படுவதாக கணக்காய்வு ஐயவினாவிற்கு பதிலாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 5 மில்லியன் பங்கிலாபம், திருத்திய மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த மற்றும் சேவையை விட்டுச்சென்றிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 408,304 ஆக இருந்தது. அந் நிலுவை மீதிகள் 7 ஆண்டுகள் முதல் 11 ஆண்டுகள் வரையான காலம் இருந்து வந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.4 செயலாற்றல்

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகளில் குறுங்கால மற்றும் நடுத்தரமட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காக பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும் போது 2015 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்காக அரசினால் ரூபா 433 மில்லியனான மானியம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது அக்கூட்டுத்தாபனம் ரூபா 60 மில்லியனான நட்டத்தை அடைந்திருந்தது.

(ii) அபிவிருத்தி லொத்தர் சபை 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டில் 3 சதவீத பின்னடைவொன்றை காட்டியிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரிக்காக வழங்கப்பட்டிருந்த பங்களிப்பு 16 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது நட்டமடைந்த 16 நிறுவனங்கள் காணப்பட்டதுடன், அந்நிறுவனங்களுக்கு இடையே 06 நிறுவனங்களுக்கு மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 15.05 மில்லியனும், 04 நிறுவனங்களுக்கு மூலதனச் செலவினங்களிற்காக ரூபா 27.56 மில்லியனுமாக நிதியேற்பாடு 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. இலங்கை மின்சார சபைக்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் 2015 ஆம் ஆண்டின் போது மூலதன நிதியேற்பாடு முறையே ரூபா 11,527 மில்லியன் மற்றும் ரூபா 39,804 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டிருந்த மூலதன நிதியேற்பாடு 401 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(இ) செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை ஒன்றாக அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டு தொழிற்சாலையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் மூலம் 3,500 மில்லியன் மருந்து குளிசைகளையும் வில்லைகளையும் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,493

மில்லியனான இச்செயற்திட்டம் தொடர்பாக 2016 ஆகஸ்ட் மாதம் வரையிலும் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பெறுகைகள் மட்டத்தில் காணப்பட்டன.

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளுக்கிடையே பொது முயற்சிகளின் நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.2(ஈ) மற்றும் (ஊ) பந்திகளின் பிரகாரம் இரண்டு நிறுவனங்களுக்காக பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்யும் போதும் பதவி உயர்வு வழங்கும் போதும் தேவையான ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்படாதிருந்தமை தொடர்பாக கண்காணிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 30 | 28 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 38 | 26 | 12 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 17 | - | 03 |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 83 | 73 | 14 | 04 |